


**27.12. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. **மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின்** உடலுக்கு குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினர்.

2. **டாக்டர் மன்மோகன் சிங் மறைவிற்கு சர்வதேச நாடுகளின்** தலைவர்கள் இரங்கல் தொவித்துள்ளனர்

3. **அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை** வழக்கு விசாரணைக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

4. **திருச்சியில் நடைபெறும் கைத்தறி கண்காட்சி மூலம் 150** கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி கூறியுள்ளார்.

5. **சீனாவில் கிங் கோப்பை சர்வதேச பேட்மிட்டன்** போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**மன்மோகன் சிங்**

**மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்** சிங்கின் உடலுக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர், பிரதமர்
திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்ற காங்கிரஸ் குழு தலைவர் திருமதி. சோனியா காந்தி, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத்சிங், திரு. அமித்ஷா, திரு. ஜே.பி.நட்டா உள்ளிட்டோரும் டாக்டர் மன் மோகன் சிங் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடலுக்கு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று நேரில் அஞ்சலி செலுத்துகிறார்.

92 வயதான டாக்டர் மன்மோகன் சிங்கின் கடந்த சில மாதங்களாக உடல்நலம் குன்றியிருந்த நிலையில், நேற்றிரவு புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் 9.51 மணிக்கு காலமானார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருமுறை நாட்டின் பிரதமராக பணியாற்றிய டாக்டர் மன்மோகன் சிங்கின் உடல் பொதுமக்கள் அஞ்சலி

செலுத்துவதற்காக புதுதில்லியில் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நாளை வைக்கப்படுகிறது.

அவரது இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் நாளை நடைபெறும்.

அன்னாரது மறைவை ஒட்டி நாடுமுழுவதும் 7 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது

அரசு நிகழ்ச்சிகள் ரத்து செய்யபட்டிருப்பதோடு, தேசியகொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் தேசியகொடி அரைக்கம்பத்தில் பறக்கும் என மத்தியஅரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**தலைவர்கள் இரங்கல்**

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு தமது இரங்கல் செய்தியில், கல்வி மற்றும் நிர்வாகத் திறமையோடு சீரிய பணியாற்றியவர் டாக்டர் மன்மோகன்சிங் என்று தெரிவித்துள்ளார்.

**நாட்டின்** பொருளாதார பாதையில் மாற்றங்களை ஏற்படுத்திய தலைச்சிறந்த பொருளாதார நிபுணர் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

**போராட்டங்களுக்கு** மத்தியில் உச்சங்களை எட்டி சாதனை படைக்க முடியும் என்பதற்கு டாக்டர் மன்மோகன் சிங்கின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

பொருளாதார சீர்த்திருத்தங்களுக்காக தம்மை அர்ப்பணித்த நேர்மையான தலைவர் என்றும், பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

**காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே** தமது இரங்கல் செய்தியில் தொலைநோக்கு பார்வையுடன் நேர்மையான தலைவரையும், சிறந்த பொருளாதார நிபுணரையும நாடு இழந்துவிட்டதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**மன்மோகன் தொடர்ச்சி**

அமெரிக்க நாட்டின் அமைச்சரவை செயலர் ஆன்டனி பிளிங்கன், பிரேசில் அதிபர் லூலா டாசில்வா, ஆப்கானிஸ்தான் அதிபர் அமித் கர்சாய், மாலத்தீவு அதிபர் முகமது நஷீத், இந்தியாவிற்கான ரஷ்ய தூதர் டெனிஸ் அளிப்போ, நேபாள வெளியுறவு அமைச்சர் டாக்டர் அர்ஸு ரானா, பல்வேறு நாட்டின் தூதர்கள் உள்ளிட்டோரும் டாக்டர் மன்மோகன் சிங் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**இந்தியா, அமெரிக்க நாடுகளுக்கு இடையே** இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் **ஜேக் சலிவனுடன்** ஆலோசனை மேற்கொண்டார்.

இருநாடுகளுக்கு இடையிலான அரசியல் நட்புறவை முன்னெடுத்து செல்வது குறித்தும் சர்வதேச பிராந்திய மேம்பாடுகள் குறித்தும் இருதலைவர்களும் விவாதித்தனர்.

டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சரை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதோடு அங்கு நடைபெறவுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மாநாட்டிலும் தலைமையுரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

**ரிசர்வ் வங்கி**

**நிதித்துறையில் செயற்கை நுண்ணறிவிற்கான** நெறிமுறைகளை கட்டமைப்பதற்காக 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் அச்சுறுத்தல்களை கண்டறிந்து கண்காணிப்பை முடுக்கி சவால்களை எதிர்கொள்வதற்கான நெறிமுறைகளை இக்குழு வகுக்கும்.

மும்பை ஐ.ஐ.டி. கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை பேராசிரியர் டாக்டர் புஷ்பக் பட்டாச்சாரியா தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**கோவி. செழியன்**

**தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழக மாணவி** பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் தேசிய மகளிர் ஆணைய விசாரணைக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவவர், அனைத்து பல்கலைக் கழகங்களிலும் மாணாக்கரை தவிர ஏனையோர் நுழைய உரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று கூறினார்.

.. **வாய்ஸ்** ..

இதனிடையே சென்னை அண்ணா பல்கலைக்கழக பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதன் செயலாளர், பதிவாளர் மற்றும் பேராசிரியர்களுடன் அமைச்சர் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

**அண்ணாமலை**

**சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி** பாலியல் வன்கொடுமை விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்க தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியன், வி. லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, தாமாக முன்வந்து இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையை மேற்கொண்டுள்ளது.

தமிழக உள்துறை செயலர், மாநில காவல்துறை தலைவர் ஆகியோர் விளக்கமளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து கோவையில் பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர் மாநிலத்தில் மகளிருக்கு எதிரான குற்ற செயல்கள் அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

கல்வி பொருளாதாரம் போன்றவற்றில் இன்றைய தலைமுறையினர் பின்தங்கியிருப்பதாகவும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**ஆர்.காந்தி**

கைத்தறி துணிகளை சந்தை படுத்த ஏதுவாக நடப்பாண்டு திருச்சி, கோவை, திருப்பூர், சேலம் சரகங்களில் மாநில கைத்தறி கண்காட்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்

திருச்சியில் மாநில அமைச்சர் திரு.கே.என்.நேருவுடன் இணைந்து கைத்தறி விற்பனை கண்காட்சியை இன்று துவக்கி வைத்து பேசியஅமைச்சர், அடுத்த மாதம் 10-ம் தேதிவரை நடைபெறவுள்ள இக்கண்காட்சி மூலம் 150 கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

70 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி ரகங்கள், 60 அரங்குகளில் காட்சிப்படுத்தப் பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன்** திருக்கோவில் உட்பட 5 திருக்கோவில்களில் பயன்பாட்டில் இல்லாத 542 கிலோ தங்கம் உருக்கப்பட்டு, தங்கபத்திர முதலீடாக பாரத ஸ்டேட் வங்கியிடம் இன்று ஒப்படைக்கப்பட்டது.

மாநில அமைச்சர்கள் திரு.KN.நேரு, திரு. சேகர்பாபு உள்ளிட்டோர் SBI அதிகாரிகளிடம் திருச்சியில் இன்று ஒப்படைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு.சேகர்பாபு, திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

**கே.என். நேரு**

**திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட பஞ்சப்பூரில்** சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 33 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள 9.6 மெகாவாட் திறன் கொண்ட தரைமட்ட சூரியஒளி மின் உற்பத்தி நிலையத்தை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**வெம்பக்கோட்டை**

**விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜயகரிசல்** குளத்தில் நடைபெறும் 3-ம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் ஆன பானைகள், தட்டுகள், சதுரங்க ஆட்டக்காய்கள் உள்ளிட்ட 2 ஆயிரத்து 900 ஆயிரம் பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**வேலூர் மாவட்டம் வள்ளிமலை அருகே** மேல்பாடியில் பராந்தக சோழன்கால கல்வெட்டுகள் கண்டுடெக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்ட தொழில்துறை ஆய்வாளர் தலைமையில் கல்வெட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் இது ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என கண்டறியப்பட்டுள்ளது.

**திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே நான்கு** ஆண்டுகளுக்கு முன்னர் வாகன தணிக்கையில் பிடிபட்ட மூன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான 11 டன் குட்கா பொருட்களை, காவல்துறையினர் இன்று தீயிலிட்டு அழித்தனர்.

**கள்ளக்குறிச்சி நாமக்கல் மாவட்டங்களில்** விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

**திருவாரூர் மாவட்டத்தில் பிரதமரின் பயிர்காப்பீடு** திட்டத்தின்கீழ் இதுவரை ஒருலட்சத்து 32 ஆயிரம் விவசாயிகள் இணைந்துள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும்** வணிகத்துறை சார்பில் விளை பொருட்களுக்கான உலர்த்தி கூடம் இளையான்குடியில் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

**தேனி மாவட்டம் கம்பம் அரசு உதவிபெறும்** தொடக்கப்பள்ளி சாலையில் இரும்பிலான நடைபாலம் அமைக்கும் பணி இன்று நடைபெறுவதையடுத்து போடி,

மூணாறு, குமுளி, வழிதடத்தில் இன்றுஒருநாள் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சஜீவனா கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**ராமதாஸ்**

தமிழகத்தில் நடப்பு பருவத்தில் ஒரு டன் கரும்புக்கு 5 ஆயிரம் ரூபாய் கொள்முதல் விலை கிடைக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்

சென்னையில் இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் கரும்பு கொள்முதலின் போது குறைந்த ஆதரவு விலை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு செயல்படுத்த வேண்டும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

**யானை**

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஹொாத்தப்பள்ளி கிராம** சாலையில் காட்டுயானை நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**கொசஸ்தலை**

**திருவள்ளூர் மாவட்டம் சத்தியமூர்த்தி சாகர்** நீர்த்தேக்கத்திலிருந்து ஆயிரம் கனஅடி உபரிநீர் இன்று வெளியேற்றப்படுவதை அடுத்து கொசஸ்தலை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**சீன Shenzhen ல், கிங் கோப்பை சர்வதேச** பேட்மிட்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் களமிறங்குகிறார். வரும் 29-ம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**மெல்பர்னில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான** 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா இன்று தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 164 ரன் எடுத்திருந்தது.

ரிஷப் பந்தும், ரவீந்திர ஜடேஜாவும் களத்தில் உள்ளனர்.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 474.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**